


# சென்னை அருகே ₹ 3,500 கோடியில் தொழில்நகரம்

## ஜெயலலிதா முன்னிலையில் கையெழுத்தானது

சென்னை: முதல்வர் ஜெயலலிதாவை ஜப்பான் அமைச்சர் சந்தித்து பேசினார். அப்போது முதல்வர் முன்னிலையில் 2 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. சென்னை அருகே மூவாயிரத்து ஐநூறு கோடி முதலீட்டில் தொழில் நகரியம் அமைக்க ஒப்பந்தம் கையெழுத்தானது. 5 ஆண்டுகளில் அமைக்கப்படும் இந்த தொழில் நகரியத்தை ஜப்பான் சிங்கப்பூரை சேர்ந்த இரு நிறுவனங்கள் இணைந்து தொழில் நகரியத்தை அமைக்கும். 1500 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த தொழில்நகரியம் அமைக் கப்படும். 15 ஆயிரம் கோடி முதலீட் டில் 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாகும். சென்னை வர்த்தக ஆதரவு மையம் அமைப்பதற் கும் புரிந்தணர்வுஒப்பந்தம் கையெ ழுத்தானது. ஜப்பான், தமிழ்நாடு வெளி வர்த்தக அமைப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத் தானதாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.